Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month
Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17
Licensed to Post without Prepayment
WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17
வேணு : 21 பிப்ரவரி 2016 கானம் : 7

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor:S.Sridhar

NO FAME NO SELF INTEREST ONLY GOD

ஸ்ரீ ஹரி:

தனி பிரதி Rs.15/-

மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ180/-

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன்
வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை

வேணு : 21 | பிப்ரவரி 2016 | கானம் : 7
Delivered by India Post
www.indiapost.gov.in


ஜனவரி 9முதல் 17 வரை சென்னை நாரத கானசபாவில் -
"திருமாலை" உபன்யாசம்

SATHGURU GNANANANDA HALL

GLOBAL ORGANISATION FOR DIVINITY INDIA TRUST
KALPATHARU DAY - 1.1.2016

ஸ்ரீமத் பாகவத சப்தாஹம் - ஹூஸ்டன், அமெரிக்கா - ராமானுஜம்ஜி

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மஹாமந்திர கீர்த்தனை - 16 மொழிகளில்
Shaking Hands Across Continents, Houston USA

Workshop at MD Anderson, Houston Dec 17, 2015 - Ramanujamji

வத்தலகுண்டு - மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - முரளிஜி

ஜனவரி 10, 2016 மதுரகீதம் இறுதி சுற்று போட்டி
வெற்றி பெற்ற அணியினருடன் ஸ்ரீஸ்வாமிஜி - சென்னை நாரத கான சபா
(உடனிருப்பது) திரு.நாவண்ணன் ஸ்டார் விஜய் டிவி Executive Producer

மார்கழி மாதம் மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவில்
நகரசங்கீர்த்தனத்தில் பங்கு கொண்ட கிராம பள்ளி சிறார்களுக்கு புத்தாடை
- கன்யாகுமரி ஸ்ரீ ஜயஜனுமான் சன்னதி

ஜனவரி 1 அன்று மதுரை SDH ஜெயின் வித்யாலயாவில் மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 பிப்ரவரி 2016 கானம்: 7

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

இந்த இதழில் ...

மதுரமான மஹனீயர்-239	05	வீடு தேடி வருவான் விட்டலன்	24
பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்	08		
பகவத் தரிசனம்	10	சனாதன கோஸ்வாமி	26
நாராயணஸ்வாமி பாகவதர்	13	பாலகர்களுக்கு ஒரு கதை	29
மாணவமணிகளுக்கான கூட்டுப்ரார்த்தனை 2015	14	சத்சங்க செய்திகள்	31
ஸ்ரீகோபாலகிருஷ்ண பாகவதர்	17	ப்ருந்தாவன கண்ணன்	36

மனது அமைதியாகவும் சுத்தமாகவும் இருந்தால்தான், எனக்கு நிம்மதி கிடைக்கும் என்று நினைப்பதை காட்டிலும், என் மனது அமைதியாகவும் சுத்தமாகவும் இருந்தால்தான் க்ருஷ்ணனுக்கு பிடிக்கும் என்று நினைப்பதுதான் அழகு.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம்: ஷண்முகப்ரியா தாளம்: ஆதி

பகவன் நாமமே பகவான் அருளை
பெற்று தந்திடுவாய் நீயே

(பகவன் ..)

அன்னை தந்தை ஆசான் உறவினர்
தோழன் எல்லாம் எனக்கு நீயே

(பகவன் ..)

பக்குவம் இல்லாத எந்தனை
பக்குவப்படுத்தி அக்கறையுடன்
தக்க தருணத்தில் யமுனை துறைவனை
எந்தன் பக்கத்தில் நிறுத்திடுவாயே

(பகவன் ..)

முன் அட்டை : மதுரபுரி ஆஸ்ரமத்தில்

பின் அட்டை - பகவான் யோகி ராம்சுரத்குமார் ஜெயந்தி விழா - திருவல்லிக்கேணி ஜனவரி 3, 2016

மதுரமான மஹனீயர் - 239

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

பிரதி வருடமும் ஆங்கில வருடப்பிறப்பான ஜனவரி 1ஆம் தேதியன்று, ஸ்ரீ ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் தன்னுடைய பக்தர்களுக்கு அவர்கள் கேட்ட வரங்களை எல்லாம் வாரி அளித்து, காமதேனுவாக அருள் பாலித்த தினத்தை ஒட்டி, நாமும் கூட்டு பிரார்த்தனை நடத்தி, மஹாமந்திர கீர்த்தனம் செய்து வருகின்றோம்.

2016 ஜனவரி 1ஆம் தேதியன்று, அத்தகைய கூட்டுப் ப்ரார்த்தனை நடத்த எந்த ஊர், எந்த இடம் என்பது கடைசி வரையில் முடிவாகாமலேயே இருந்தது. முதலில் சேலத்தில் நடத்தலாமா என்று சிந்தித்து வந்தோம். பிறகு விருதுநகர், சிவகாசி, பெரியகுளம், உடுமலைப்பேட்டை சத்சங்க நிகழ்ச்சிகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சென்று வந்தபொழுது, ஜனவரி 1 கூட்டு ப்ரார்த்தனையை மதுரையில் நடத்தலாம் என்றார்கள். போதிய அவகாசமும் இல்லை. முடிவு செய்த சில நாட்களில், சென்னையை வேறு இரண்டு முறைகள் இதுவரை காணாத மழையும் வெள்ளமும் தாக்கியது. இதனால், மதுரையில் நடத்தலாமா வேண்டாமா என்று சந்தேகம் வந்தது. அதற்கு பிறகு, மழை வெள்ளத்தால் தமிழ்நாடு பாதிக்கப்பட்ட நிலையில், கண்டிப்பாக இந்த வருடமும் கூட்டுப்ரார்த்தனை செய்தே ஆக வேண்டும் என்று முடிவு செய்து, அதற்கான வேலைகள் மிகவும் அவசர அவசரமாக தொடங்கப்பட்டது.

பெரிய விளம்பரங்கள் இல்லை. வெளியூரிலிருந்து யாரும் விசேஷமாக அழைக்கப்படவில்லை. ஆனாலும் ஜனவரி 1, 2016 மாலை SDH பள்ளி வளாகத்தில், 10000 பக்தர்கள் கூடினார்கள். ஸ்ரீஸ்வாமிஜி சற்றேறக்குறைய ஒரு மணி நேரம் 10நிமிடங்கள் உரையாற்றினார்கள்.

ஆரம்பத்தில் மதுரை நகரத்தின் வரலாற்றுப் பெருமை, மதுரையை சுற்றி அமைந்துள்ள கோவில்கள், மதுரையில்

அவதாரம் செய்த மஹான்கள், இப்படியாக பேசி வந்து, இறைவனுடைய நாமம், கூட்டு ப்ரார்த்தனையின் மஹிமை என்று பேசி முடித்தார்கள். எல்லோருக்கும் புரியும்படியாக எளிமையாக உரையாற்றினார்கள். அப்பொழுது ஒரு சிறு சப்தமுமில்லை. கூடியிருந்த **10000** பக்தர்கள் தங்களை மறந்திருந்தனர். அவர்களிடையே அப்படி ஒரு அமைதி நிலவியது. எல்லோரும், அப்படி ஒரு ஆர்வத்துடன் ஸ்ரீஸ்வாமிஜியின் பேச்சை கேட்டு மகிழ்ந்தார்கள். கடைசியாக, ஸ்ரீஸ்வாமிஜி எல்லோரையும் சிறிது நேரம் கண்களை மூடி பிரார்த்தனை செய்ய சொன்னார்கள்.

அப்பொழுது அத்துனை பக்தர்களும், கண்களை மூடி நிசப்தமாக பிரார்த்தனை செய்தது, அந்த நகரமே தியானம் செய்தது போல் இருந்தது. பிறகு **10000** பக்தர்களும் ஸ்ரீஸ்வாமிஜியுடன் கூடி, பகவன்நாம கீர்த்தனத்தை கைகளை தூக்கி தட்டிக்கொண்டே சொன்னது அவ்வளவு ஆனந்தமாக இருந்தது. அவ்வளவு பக்தர்களும், வாழ்க்கையில் ஒரு நம்பிக்கையுடனும், தெய்வீகமான உணர்வுடனும், மஹாமந்திர கீர்த்தனத்துடன் அமைதியாக இல்லம் திரும்பினார்கள். இந்த கூட்டு பிரார்த்தனை webcast செய்யப்பட்டது. உலகம் முழுவதும் இருந்த பக்தர்கள் அங்கு இருந்தபடியே, கூட்டு ப்ரார்த்தனையில் கலந்துகொண்டு பயனடைந்தார்கள்.

இந்த வருடம், பகவானுடைய கிருபையால், சரித்திர பெருமை வாய்ந்த மதுரை மாநகரில் கூட்டு ப்ரார்த்தனை இனிதே நடந்தேறியது.

உலகில் செடிகள், கொடிகள் பல உண்டு. சிலவற்றிற்கு அதன் இலை முக்கியம். சிலவற்றிற்கு அதன் பழம் முக்கியம். சிலவற்றிற்கு அதன் காய் முக்கியம். ஆனால் சர்க்கரைவள்ளிக்கிழங்கிற்கு அதன் வேர் மட்டுமே முக்கியம். அப்படி, இந்த உலகமான செடிக்கு ஆத்மஸ்வரூபமான வேர் மட்டுமே முக்கியம். மற்றவை அவசியமற்றவை.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

AGS அலுவலகத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற ஸ்வாமிஜியின் பக்தர் ஒருவர் திருவனந்தபுரத்தில் இருந்தார். ஸ்வாமிஜி அவரை எப்பொழுதும் திரு.சுப்ரமணியன், அம்பிகா காபி என்றுதான் அழைப்பார். (அவர் ஓய்வு பெற்ற பிறகு ஒரு காபி பவுடர் கடை நடத்தி வந்தார்). அவர் இப்பொழுது பகவான் திருவடியை அடைந்து விட்டார். சில வருடங்களுக்கு முன்பு ஸ்ரீஸ்வாமிஜி குருவாயூரில் சப்தாஹம் நடத்தினார். அப்பொழுது மாலையில் பக்தர்களுடன் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவரை பார்த்து, "விடாமல் பாகவதம் படித்து வாருங்கள். உங்களுக்கு மறுபடியும் பிறவி வராது" என்றார். உடனே, அவர் சோகமாகி அழ ஆரம்பித்து விட்டார். ஸ்வாமிஜிக்கு ஒன்றும் புரியவில்லை. அவரை பார்த்து, "ஏன் வருத்தமாகி விட்டீர்கள்" என்று கேட்டார். அவரோ, "என்ன இப்படி பிறவி இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். எனக்கு பிறவி வேண்டும். இந்த பிறவியில் அதிகமாக உங்களுடன் இருக்க கூடிய பாக்யம் இல்லை. அடுத்த பிறவியில் குழந்தையிலிருந்து உங்களை விட்டு பிரியாத ஒரு பிறவி வேண்டும்" என்று அழுது கொண்டே நமஸ்கரித்தார். அவருடைய பக்தியை கண்டு, ஸ்ரீஸ்வாமிஜி நெகிழ்ந்துவிட்டார்.

சனாதனப்புதிர் பகுதி 82 - கேள்விகள்- ஆத்ரேயன்

1. கூர்ம புராணத்தின்படி சூரியனுக்கு எத்தனை மனைவிகள்? எத்தனை குழந்தைகள்? அவர்களின் பெயர் என்ன?
2. சூரியனுடைய ஏழு குதிரைகளின் பெயர் என்ன?
3. அக்னி புராணம் சந்திரனை யார் குழந்தை என்று சொல்கிறது?
4. பத்மபுராணம்படி சந்திரனுக்கு எத்தனை மனைவிகள்? யாரிடம் பிரியமாக இருந்தார்? தக்ஷன் என்ன சாபம் கொடுத்தார்?
5. விஷ்ணுதர்மோத்திர புராணம்படி - சந்திரனுக்கு எத்தனை மனைவிகள்?



பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பதில்கள்

கேள்வி: பக்தி உயர்ந்த நிலையை அடையும்பொழுது கண்களில் நீர் வருவது ஏன்?

பதில்: மனதில் ஏற்படும் மாற்றங்கள், சரீரத்தில் வெளிப்படவே செய்யும். மனதில் பயம் ஏற்பட்டால், உடலில் நடுக்கமும் வியர்வையும் உண்டாகின்றது. ஏதாவது மனதில் சோகம் ஏற்பட்டால், கண்களில் அழுகை வருகின்றது. யாராவது நம்மை அவமானப்படுத்தி விட்டாலோ, அகங்காரம் அடிபட்டாலோ, கண் கலங்குகின்றது.

இப்படியாக மனதில் ஏற்படும் ரசாயன மாற்றங்கள், சரீரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தத்தான் செய்யும். அதிலும் கண்கள், அதை உடனே பிரதிபலிக்கும்.

கேள்வி: ஸ்ரீமத் பாகவதத்தை, தவறுதலாக படிக்கலாம் என்று ஸ்ரீமத் பாகவதத்திலேயே சொல்லி இருக்கின்றதே?

பதில்: ஒருவனுக்கு பாகவதம் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கி விட்டது; சரியாக படிக்க வரவில்லை; ஆனால் ஆர்வத்தால், தப்பும் தவறுமாக படித்தாலும் தவறில்லை.

அதாவது, இதன் உட்பொருள் என்ன என்றால், ஸ்ரீமத்பாகவதத்தை தவறாக கூட படிக்கலாம். ஆனால் Bhaavam இல்லாமல் படிக்க கூடாது என்பதே ஆகும்.

கேள்வி: நீங்கள், "ஹரே ராம மஹாமந்திரம் சொல்" என்கின்றீர்கள். மற்றொருவர், "ராம ராம சொல்" என்கின்றார். மற்றொருவர், "ராமகிருஷ்ணஹரி சொல்" என்கின்றார். மற்றொருவர், "ஸ்ரீராம் ஜெயராம் ஜெய ஜெய ராம் சொல்" என்கின்றார்.

பதில்: நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் மருத்துவரை பார்க்க

செல்கின்றீர்கள். அவர், "உங்கள் ரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைந்துள்ளது. அதனால் காரட்டையோ, சிவப்பு முள்ளங்கியையோ, பீட்ரூட்டையோ, ஆப்பிளையோ, தக்காளியையோ அதிகம் சேர்த்து கொள்ளலாம்" என்கின்றார்.

டாக்டர் ஏன் ஒன்றின் பெயரையே சொல்லவில்லை. இறைவனும், ஒரே ஒரு காய்கறியை மட்டும் படைக்கவில்லை. உலகத்தில் மக்களின் ருசி, நபருக்கு நபர் வித்தியாசப்படும். உனக்கு உன் குரு எதை உபதேசம் செய்தாரோ, அதை மட்டும் சொல்லி வா; எந்த ஆராய்ச்சியும் வேண்டாம். அதுவே போதும்.

கேள்வி: தெய்வத்திற்கு, மனிதனாக அவதாரம் செய்வது ஒரு குறை என்று என் நண்பர் கூறுகின்றார். அவர் ஒரு சிவபக்தர்.

பதில்: நாம், உலகத்தில் உள்ள எல்லா மதங்களையும் எடுத்து கொள்வோம். அந்த மதத்தின் கடவுளுக்கு உருவம் உண்டோ இல்லையோ, அவதாரம் உண்டோ இல்லையோ, இவைகளை கூட, அந்த மதத்தை ஸ்தாபித்த மனிதராக வந்த மஹாபுருஷர் சொல்லித்தான், தெரிந்து கொள்ள வேண்டி உள்ளது.

இப்படியிருக்க, அத்தகைய மஹாபுருஷர்களை காட்டிலும், தம்மை மக்கள் ஓரளவாவது சரியாக புரிந்து கொள்ள, தெய்வம் அவதாரம் செய்வதுதான் பூரணமாகும். அது குறை ஆகாது. அப்படி தெய்வம் அவதாரம் செய்யவில்லை என்றால், தெய்வத்தை யாருக்கும் புரியவே புரியாது.

கேள்வி: மஹாபுருஷர்கள் எல்லாம், பல அற்புதங்களை நிகழ்த்தித்தானே மக்களை தன்பால் ஈர்த்துள்ளார்கள். அப்படி இருக்க, அற்புதங்கள் ஆன்மீகத்தின் அடையாளம் ஆகாது என்று எப்படி கூற முடியும்?

பதில்: மஹாபுருஷர்கள், தன்னலமற்ற தூய தெய்வீக அன்பினாலும், கருணையினாலும், உலகத்தையே தன்பால் ஈர்த்துள்ளனரே தவிர வெறும் அற்புதங்களால் மட்டும் அல்ல.

பகவத் தரிசனம்

-நல்ல ஹரி

நாம் கண்கள் திறந்த நிலையில், பலவிதமான நாமரூபங்கள் கொண்ட காட்சிகளை பார்க்கின்றோம். நிகழ்காலத்தில் பார்ப்பது மட்டுமல்லாமல், பிறந்த நாள் முதல் இன்று வரை பார்த்து வருகின்றோம். அதுபோல், நம் வாழ்நாள் முழுவதும் பார்க்க போகின்றோம். இன்று வரை நாம் பார்த்த நாமரூபங்கள் எல்லாம் ஸ்தூல பிரபஞ்சம்; அதாவது பௌதிகமான உலகம்.

இதுவரை நாம் பார்த்த நாமரூபங்கள் எல்லாம், நம் மனதில் நன்றாக பதிந்து விடுகின்றன. அது எப்படி தெரிகின்றது என்றால், அண்மையில் நடந்த விஷயங்களும், வெகு நாட்களுக்கு முன்பு நடந்திருந்த, நம்மை அதிகமாக பாதித்த சோகமயமான விஷயங்கள் அல்லது இன்பமயமான விஷயங்கள் எல்லாம், நாம் சும்மா இருக்கும்பொழுது, நம் மனதில் எண்ணங்களாகத் தோன்றி, அதற்குரிய பாதிப்புகளை உண்டு பண்ணுகின்றன. ஆழ்ந்த மனதில் பதிந்த எண்ணங்கள், கனவுகளாக பிரதிபலிக்கின்றன.

நாம் கண்களை மூடிக்கொண்டு, நாம் இதுவரை பார்த்த, கேட்ட விஷயங்களை மனதினால் சிந்தனை செய்ய முடியும். உதாரணமாக, நாம் பார்த்த ஒரு மனிதரை மனதில் கொண்டு வந்து, சில மணி துளிகள் நிறுத்தி அவரை மட்டுமே சிந்திக்க முடியும். இப்பொழுது, அந்த மனிதர் ஸ்தூல உலகத்தில், நிகழ்காலத்தில் என் முன்பாக இல்லை. அவர் இப்பொழுது உயிரோடு இல்லாமலும் இருக்கலாம். இப்போது நான் சொல்லப்போகும் விஷயத்தை நன்றாக கவனியுங்கள். நான் நினைத்த அந்த மனிதரின் உருவம், நம் உடலில் எந்த அவயத்தில் தோன்றுகிறது? இதயத்திலா, கல்லீரலிலா, நுரையீரலிலா, கணையத்திலா .. சொல்ல முடியுமா? முடியாது. அதுபோல், அவருடைய உருவம் இருப்பதற்கு ஒரு **SPACE**

வேண்டுமல்லவா, அந்த SPACE நம் உடலில் எங்கு இருக்கின்றது. சொல்ல முடியாது அல்லவா?

இன்னும் மேலே விவரிப்போம். இதுவரை நாம் பார்த்திராத, கேட்டிராத ஒன்றைக்கூட சிந்தனை செய்ய முடியும். ஒரு பூதம் என்று வைத்து கொள்வோம். இதுவரை நாம் பார்த்ததில்லை. அது கருப்பாக இருக்கும். நீல உடை அணிந்திருக்கும். தலையில் இரு கொம்புகள் இருக்கும். பற்கள் கோரமாக இருக்கும். கால்கள் பெரியதாக இருக்கும். கண்கள் கருணை இல்லாததாக இருக்கும். வயிறு பெரியதாக இருக்கும். கையில் இரும்பு முட்கள் உள்ள ஒரு தடி இருக்கும்... என்று வர்ணித்துக்கொண்டே போனால், அவைகளை நம் மனதில் உருவகப்படுத்தி, ஒரு உருவத்தை சிந்தனைக்கு கொண்டுவர முடிகின்றது. இத்தகைய ஒரு நாமரூபத்தை இதுவரை நீங்கள் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. ஆனால், ஒருவர் சொல்ல சொல்ல, மனதில் அந்த உருவத்தை கொண்டு வருகின்றீர்கள் அல்லவா?

மேலும், அந்த பூதம் மிகவும் கொடுமையானது. அதை திட்டினால், நம்மை வந்து அழித்துவிடும் என்று அதன் குணாதிசயங்களை வர்ணிக்கும்பொழுது, கற்பனையான ஒரு உருவத்தை நினைத்து, கற்பனையான அதன் குணாதிசயங்களை நினைத்து, நாம் பயத்திற்கு உள்ளாகின்றோம். இவைகள் அனைத்தும் நாம் கேட்டதினால் மட்டுமே வந்தது.

அதனால், பேச்சில் என்ன இருக்கிறது என்று நாம் கேட்க முடியாது. ஒரு பெண்ணை வசப்படுத்துபவன், பேசிப்பேசியே அந்த பெண்ணை வசப்படுத்துகின்றான். பணத்திற்காக மற்றவர்களை ஏமாற்ற நினைப்பவர்கள், பேசிப்பேசியே அவர்களை ஏமாற்றுகிறார்கள். பதவியை பிடிக்க நினைக்கும் தலைவர்கள், பேசிப்பேசியே மக்களை வசப்படுத்துகிறார்கள். ஒரு தொண்டன், தனது இனிமையான பேச்சினால், தலைவனின் அன்புக்கு பாத்திரமாகின்றான். இருவருக்குள் நட்பிற்கோ, வெறுப்பிற்கோ, அன்பிற்கோ,

ஏமாற்றத்திற்கோ, கோபத்திற்கோ, பாசத்திற்கோ, பேச்சு ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது.

இவற்றை எல்லாம், ஏன் இப்போது எழுதுகின்றீர்கள் என்று நீங்கள் கேட்கலாம். விஷயத்திற்கு வருகின்றேன். இதுவரை நாம் பார்த்திராத, ஆனால் தான் பார்த்துள்ள ஒரு தெய்வத்தின் உருவத்தையும், குருநாதர் நமக்கு உபதேசிக்கின்றார்.

அதன் குணாதிசயங்களையும், அந்த பகவான் சங்கு சக்ர கதாதரனாக, சதுர்புஜனாக, பீதாம்பரதாரியாக, வைஜெயந்திமாலாதரனாக, நீலமேகச்யாமளனாக, ஸ்ரீவத்ஸ கௌஸ்துபதரனாக, தாமரை போன்ற கண்கள் உடையவனாக, கஸ்தூரி திலகம் அணிந்தவனாக, கிரீட குண்டலங்கள் தரித்தவனாக, சரணத்தில் நூபுரங்கள் தரித்தவனாக, இப்படியாக குரு உபதேசித்த உருவத்தை மனதில் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், அவர் கருணையே வடிவானவர்; நம்மை ரக்ஷிக்க தயாராக உள்ளார்; சரணாகத வத்ஸலர் என்றெல்லாம் குணாதிசயங்களையும் சிந்திக்க வேண்டும். இதற்குத்தான் **Bhaavam** என்று பெயர்.

இதை நாம் அதிகமாக, ஒருமுகப்பட்ட சிந்தனையுடன் அடிக்கடி தீவிரமாக சிந்தித்து வருவதற்கு **Bhaavabalam** என்று பெயர். இந்த **பா**வபலத்தினால், ஏற்கனவே நம் மனதில் கண்டு களித்திருந்த நாமரூபங்களுடைய வாசனைகள் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து, இந்த ஒரு பகவானின் உருவம் மட்டுமே, எப்பொழுதும் ஹிருதயத்தில் தெரிய ஆரம்பிக்கும். தாமஸ, ராஜஸ வாசனைகள் அழிந்து, சுத்த சாத்வீக வாசனைகள் மட்டும் மேலோங்கி இருக்கும்பொழுது, பொன்மயமான ஹிருதயாகாசத்தில், நீல ஜோதியாக பகவான் பிரகாசிப்பான்.

பிறகு அந்த பக்தனுக்கு, பகவத் தரிசனமும் பரிபூரணமான ஞானமும் சித்திக்கும். நாமும், எப்பொழுதும் பகவானின் திவ்ய மங்கள ரூபத்தை தியானம் செய்து கல்யாண குணங்களை சிந்தித்து வருவோமாக!

நாராயணஸ்வாமி பாகவதர்

வத்தலகுண்டு என்பது மதுரை அருகே உள்ள ஒரு கிராமம். அங்கு நாராயணஸ்வாமி பாகவதர் என்று ஒருவர் இருந்தார். கோவிந்தபுரத்தில், மடத்தில் அடிக்கடி தங்கி இவர் பஜனை செய்வார். ஒரு சமயம், இவர் மடத்தில் தங்கி இருந்தபொழுது, மடத்து வாசலில் படுத்து உறங்கிகொண்டு இருந்தார். அப்பொழுது "சடக், சடக்" என்று யாரோ மரப்பாதுகை ஒன்று போட்டுக்கொண்டு நடக்கும் சத்தம் அவர் காதில் விழுந்தது. எங்கிருந்து இந்த சப்தம் வருகிறது? யார் இங்கு பாதுகை போட்டுக்கொண்டு நடந்து சென்று கொண்டிருக்கிறார்? என்ற கேள்வியுடன், சப்தம் வந்த திசையை நோக்கி பார்த்தார்.

அப்போது காவேரிக்கரையிலிருந்து ஒரு யதி தண்ட கமண்டலுவுடன் மடத்திற்குள் நுழைவதைக் கண்டார். 'யாரோ ஒரு யதி வந்திருக்கிறார் போலும். நாளை காலை தரிசனம் செய்யலாம்' என்றெண்ணி அன்றிரவு உறங்கிவிட்டார். மறுநாள் பொழுது விடிந்ததும், அந்த யதிகளை காண விழைந்தார் பாகவதர். ஆனால் எவ்வளவு தேடியும், அங்கு ஒருவரும் தென்படவில்லை.

அப்பொழுதுதான், அவருக்கு பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகளே தரிசனம் அளித்திருக்கிறார் என்பதை உணர்ந்தார்.

மற்றொரு சமயம் அவர் கோவிந்தபுரம் மடத்தில் தங்கி இருந்தபொழுது, அவர் காதில் ராம நாமம் கேட்டுக்கொண்டே இருந்தது. எங்கிருந்து நாமம் கேட்கிறது என்று ஆராய, முடிவில் அது போதேந்திரரின் சமாதியிலிருந்துதான் த்வனிக்கிறது என்பதை கண்டார். இச்சம்பவத்திற்கு பின், அவர் கோவிந்தபுரத்திலேயே தங்கி, குருநாதருக்கு கைங்கரியம் செய்து க்ருதார்த்தர் ஆனார்.

மாணவமணிகளுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - 2015 - ஒரு பார்வை

ஒவ்வொருவரையும் வாழ்நாளில் ஒரு முறையாவது மஹாமந்திரம் சொல்ல வைக்க வேண்டுமென்பதே நம் ஸத்குருநாதரின் பரம கருணையுடன் கூடிய ஸங்கல்பம். நம் ஸத்குருநாதரின் பரம கிருபையால், சென்ற வருடம் முரளிஜி, பல பள்ளிகளில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை செய்தார். கடந்த வருடம் ஜனவரி **2015** முதல் டிசம்பர் **2015** வரை சுமார் **125** பள்ளிகளில், சுமார் **60000** (குறிப்பாக **10/12** வகுப்பு) மாணவ, மாணவியர் முன்னிலையில் **12** மாவட்டங்கள்/ **36** ஊர்கள்/ **27** கிராமங்களில், படிப்பில் சாதிக்க ஊக்கப்படுத்துதல் மற்றும் மஹாமந்திர கூட்டுப்ரார்த்தனையும் நடைபெற்றது.

இந்த மாணவ மணிகளுக்கான மஹாமந்திர பிரார்த்தனை சென்னை, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, சிவகங்கை, தேனி, திருநெல்வேலி, திருவள்ளூர், தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம், விருதுநகர், ஆயக்குடி, பொடையூர், ஆலங்குளம், பூவநாதபுரம், ஆவுடையார்கோவில், புதுவயல், திருநகர், அழகர் கோவில், திருநகர், சிறுபாக்கம், குமினிப்பேட்டை, சிவத்தையாபுரம், திட்டக்குடி, இளந்தூர், சுப்ரமண்யபுரம், காட்டுநாயக்கன்பட்டி, தியாகராஜபுரம், கீழப்பாவூர், திருப்பாதிரிபுலியூர், கீழக்கல், திருத்தங்கல், கோட்டையூர், வி.கே.புரம், மஹாரண்யம், வேப்பூர், மாடத்துப்பட்டி, விஜயகரிசல்குளம், நாரணபுரம், விளாம்பட்டி, பட்டிவீரம்பட்டி, விருத்தாசலம், அம்பாசமுத்திரம், அரக்கோணம், அறந்தாங்கி, அருப்புக்கோட்டை, வத்தலகுண்டு, கடம்பூர், கடயம், கடயநல்லூர், கல்லிடைக்குறிச்சி, காரைக்குடி, கோவில்பட்டி, மங்களூர், நிலக்கோட்டை, புளியங்குடி, சிவகாசி, சாத்தூர், ராணிப்பேட்டை, சோளிங்கர், ஸ்ரீபெரும்புதூர், தாயில்பட்டி, திருநின்றவூர், திருச்செந்தூர், திருத்தணி, உசிலம்பட்டி ஆகிய இடங்களில் தமிழகமெங்கும் ஏராளமான பள்ளிகளில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சென்னை, தூத்துக்குடி, சிவகாசி, விருதுநகர், பெரியகுளம், வத்தலகுண்டு, மதுரை, தாயில்பட்டி, அம்பை, திருத்தணி, மங்களூர் நாமத்வார் மற்றும் **GOD** சத்சங்க அன்பர்கள் ஏற்பாடு செய்திருந்த இப்பிரார்த்தனை கூட்டங்களில் முரளிஜி பங்கேற்றிருந்தார்.

ஒவ்வொரு வருடமும் பள்ளிகளில் மிகுந்த வரவேற்பு கிடைப்பதுடன், கூட்டுப்ரார்த்தனையில் கலந்து கொள்ளும் பள்ளிகள் / மாணவர்களின் எண்ணிக்கையும், கணிசமாக உயர்ந்து வருகிறது. அவனன்றி ஒரு அணுவும் அசையாது என்பதற்கேற்ப, பல பள்ளிகளில் முதல்முறை செல்லும்போதே, நம் ஸத்குருநாதரின் ஸங்கல்பத்தினால் மட்டுமே அனைத்தும் நடப்பதை கண்கூடாக அறிய முடிந்தது. உதாரணத்திற்கு, நம் குருநாதரின் உபன்யாசத்தை முன்பே ஒரு ஆசிரியரோ அலுவலரோ கேட்டு, ஸ்ரீஸ்வாமிஜியை தரிசனம் செய்ய ஆவலுடன் இருப்பர்; மஹாமந்திரத்தை பள்ளி பிரார்த்தனையில் பாடுபவர்களாக இருப்பர். சில இடங்களில் நம் ஸத்குருநாதரை நன்கு அறிந்தவர்களாகவும் கூட இருப்பர்.

மாநில, மாவட்ட அளவில் தேர்வில் சாதித்த பல மாணவ, மாணவியர் (உதாரணத்திற்கு, ரத்தினமணி-விருதுநகர்/ சுபாஷ்-அம்பாசமுத்ரம்), எவ்வாறு தங்களால் சாதிக்க முடிந்ததென்பதையும், தங்கள் அனுபவத்தையும், தங்களின் முயற்சி, ஆசிரியர்கள் தங்களுக்கு தந்த வழிகாட்டுதல், மஹாமந்திர கீர்த்தனத்தின் பலன் முதலியன குறித்து கடிதம் வரைந்துள்ளனர். பல பள்ளிகளின் நிர்வாகத்தினரும் (உதாரணத்திற்கு, **Alagappa Matric**-காரைக்குடி/ **St Antony Matric**-கடலூர்) இந்த கூட்டுப்ரார்த்தனை மூலம் அடைந்த பலன்களையும், அனுபவத்தையும் நமக்கு கடிதமாக அளித்துள்ளனர். எடுத்துக்காட்டாக, அழகப்பா பள்ளியில் மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரை மதித்து நடந்து உழைத்து படிக்க வேண்டும் என்று முரளிஜி சொன்னது மாணவர்கள் மனதில் பதிந்தது என்றும்; **St.Antony** பள்ளியில் இப்பிரார்த்தனை கூட்டம் மாணவர்களுக்கு ஊக்கம் தருவதாகவும், மனமலர்ச்சி தருவதாகவும், அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிகோலுவதாகவும் இருந்தது என குறிப்பிட்டு இருந்தனர்.

நாம பிரசாரத்திற்காக புதிய கிராமங்களுக்கு செல்லும் பல சமயங்களில், அங்குள்ள சிலர் நம்முடைய கூட்டுப்ரார்த்தனையை நினைவு கூர்ந்த பின்னர், **3-4** வருடங்களுக்கு முன்பு, எங்கள் பள்ளியில். நீங்கள் மஹாமந்திரம் சொல்லி பிரார்த்தனை செய்தீர்களே! நாங்கள் இன்றும் நாமம் சொல்லி வருகிறோம் என்றும் சொன்னார்கள்.

படிப்பில் மாணவர்கள் சாதிப்பதற்கு மட்டுமன்றி, மஹாமந்திரம் பல நன்மைகளை பள்ளிகளுக்கும் கொடுத்துள்ளது. உதாரணமாக, காரைக்குடி அருகே புது வயல் கிராமத்தில் ஒரு பழமையான பள்ளியில் கடந்த **7** வருடங்களாக கூட்டுபிரார்த்தனை செய்து வருகிறோம். முதல் வருடம் சென்றபோது, பள்ளி மிகவும் பராமரிப்பின்றி/ போதிய அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி, வகுப்பில் அமரும் இடம்கூட வசதியின்றி, மழையால் பாதிக்கப்பட்டும் இருந்தது. மாணவர்களுக்கு மட்டுமின்றி பள்ளிக்காகவும் சேர்த்து பிரார்த்தனை செய்த இரண்டே வாரங்களில், அதிகாரிகள் வருகை தந்து பள்ளியை பார்வையிட்டதோடு மட்டுமின்றி, தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர். அந்த பள்ளியில் இன்றும் வகுப்பு தொடங்கும் முன்பு **11**முறை நாமம் சொல்லி வருகிறார்கள். வீரசேகரபுரத்தில் (புதுவயல் அருகில்) மற்றொரு பள்ளியில் நம் கூட்டுப்ரார்த்தனை நடந்ததை தொடர்ந்து, மாணவர்கள் அதன்பால் ஈர்க்கப்பட்டு (நூற்றுக்கும் மேல்பட்ட மாணவர்கள்) பள்ளி Hostelல் தினமும் மாலையில் **15** நிமிடம் மஹாமந்திரம் கூறி வருகிறார்கள்.

ஜனவரி மாதத்தில் முரளிஜி, உடுமலைப்பேட்டை, சிவகாசி, பெரியகுளம், தேனி, போடிநாயக்கனூர், நிலக்கோட்டை, சிலுக்குவார்பட்டி, வத்தலகுண்டு, மதுரை ஆகிய இடங்களில் **20**பள்ளிகள் மற்றும் **2** கல்லூரிகளில் **12000** மாணவ, மாணவியர் முன் கூட்டுப்ரார்த்தனை சத்சங்கம் நிகழ்த்தினார். மேலும், பெரியகுளத்தில் ஒரு பொது மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

தொடர்ந்து வரும் வருடங்களிலும், மேலும் பல ஆயிரம் மாணவ/மாணவியரும்/ பள்ளிகளும் பயனடைய நம் ஸத்குருநாதரின் திருவடியில் பிரார்த்தனை செய்வோமாக.

ஸ்ரீ கோபாலகிருஷ்ண பாகவதர் சரித்திரம் -3

சென்ற இதழ் தொடர்ச்சி ....

'அபிநவ த்யாகராஜர்' ஆன பாகவதரிடம் பலர் வந்து, 'ஊரில் மழையில்லை'; 'குடிக்க நீரில்லை'; 'பந்தல் போட மரமில்லை; கீத்தில்லை' என்று 'இல்லை பாட்டு' பாடுவார்கள். அவர்களிடம் எல்லாம், 'பகவான் கொண்டு தருவார்' என்பார். உத்ஸவம் ஆரம்பிக்கும் முன், ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்மன் முன் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து கிளம்புவார். உடனே 'யோகக்ஷேமம் வஹாம்யஹம்' என்று கூறிய பகவான் உத்ஸவ பொறுப்பை ஏற்று கொள்வார்.

உத்ஸவம் நடக்கும் விதம், பரம ஆச்சரியமாக இருக்கும். எதற்காகவோ பந்தல் போட இருப்பவர்களை, ஸ்வப்னத்தில் சென்று, உத்ஸவம் நடக்க இருக்குமிடத்தில் போய், பந்தல் போட உத்திரவிடுவார். உஞ்சவ்ருத்தியில் கிடைக்கும் அக்ஷதை எப்படி பல்லாயிரக்கணக்கான பக்தர்களுக்கு சமாராதனை செய்ய போதுமாகும்? ஆதலால் ஒரு பக்தனுக்கு பகவான், "அரிசி மூட்டை, உப்பு, புளி, காய்கறி, இலையுடன் சென்று ஸமாராதனை செய்" என்று கட்டளையிடுவார்.

பக்த விஜயத்தில், நாம் கூட, பகவானின் இது போன்ற பல லீலைகளை படித்திருப்போம். உண்மையான பக்தியுடன் பஜிப்பவர்கள் வாழ்வில், இன்றும் பகவான் விளையாடுகிறான் என்பதற்கு பாகவதருடைய வாழ்க்கையில் நடந்த இச்சம்பவங்களே ப்ரமாணம். பந்தி பந்தியாக, ஸமாராதனை நடந்தபின், பாகவதர் அந்த உச்சிஷ்ட இலைகளில், அங்க ப்ரதக்ஷிணம் செய்து, அப்படியே சென்று கோயில் குளத்தில் ஸ்நானம் செய்வார். இதை பார்ப்பதற்கு, யாகம் செய்வோர் அவப்ருத ஸ்நானம் செய்வது போல் இருக்கும்.

ஒருமுறை இவருக்கு, மூக்கில் ஒரு அறுவை சிகிச்சை செய்யும்படி நேர்ந்தது. அப்போது மயக்க மருந்து எதுவும் போட வேண்டாம் என்று சொல்லி, ஆபரேஷனின் போது,

மனதையும் வாக்கையும் பகவானிடம் செலுத்திவிட்டார். பின் டாக்டரிடம் "உமது வேலை முடிந்துவிட்டதா?" என இவர் கேட்டபோது, டாக்டர் ஆச்சரியமடைந்து, இவர் ஒரு பெரிய மஹான் என்று கூறி நமஸ்காரம் செய்து, பீஸும் வாங்காமல் சென்றார்.

ஒருமுறை, கடும் வயிற்று வலியால் அவதிப்பட்டு கொண்டிருந்த ஒருவரின் கனவில், பாகவதரின் உருவம் தோன்றியது. அந்த நபர், பாக்யவசமாக கனவில் தோன்றிய அதே உஞ்சவ்ருத்தி கோலத்தில், பாகவதரை மாயவரத்தில் கண்டார். அங்கு சென்று பஜனை ஆரம்பிப்பதற்கு முன்பே, அவரது நோய் மாயமாக மறைந்தது. அவரும் பஜனையில் ஈடுபட்டார்.

இதுபோல், பல ஆச்சரியமான சம்பவங்கள் அவர் வாழ்க்கையில் நடந்தன. இவையெல்லாம் ஒருபக்கமிருக்க, எல்லோரும் கற்க வேண்டிய நற்குணங்களின் குன்றாக இருந்தார் பாகவதர். பரம சாந்தர். மிகவும் உத்ஸாஹி. ஒருவரிடமும் கடும் சொற்கள் பேசவே மாட்டார். யார் எங்கு பஜனைக்கு அழைத்தாலும் செல்வார். இளம் பாகவதர்களை உற்சாகப்படுத்துவார். தேவையானால் திருத்துவார். சில சமயம் கடும் காய்ச்சல், உடல் நலமில்லாத நிலையிலும், பஜனைக்கு அழைத்தால் சென்று விடுவார்.

இப்படி பக்தியே உருவம்! பஜனையே சரீரம்! ஆசாரமே ஆகாரம் என்று வாழ்ந்த இந்த பரம பாகவதரை ஸ்மரிப்பதாலேயே நாம் பாவனமடைவோம்.

நீச்சல் தெரியாதவன், நீரில் மூழ்கியவனை காப்பாற்றுவதற்காக நீரில் குதித்தால், மூழ்கியவனை காப்பாற்றாததோடு மட்டுமல்லாமல், தானும் மூழ்கி போவான். அப்படித்தான், தானே கரையேறாத குரு ஸம்ஸார பந்தத்தில் மூழ்கியவர்களை கரையேற்ற நினைப்பது.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji

Gururam Consulting Private Ltd

வீடு தேடி வருவான் விட்டலன் -24

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

ஸ்ரீஞானேஸ்வரர்-13 (பிரதிஷ்டானபுரம்)

தனக்குப்பின் குழந்தைகள் பாடு மிகவும் கடினம் என்பதை உணர்ந்த விட்டல்பந்த், சாஸ்திரம் படித்த வித்வான்களின் முடிவை கேட்பது; அவர்கள் சொல்வதை ஏற்பது என்று முடிவு செய்தார். குழந்தைகளுக்கும் ருக்மிணிக்கும் அதுவே சரியென தோன்றியது. பிரதிஷ்டானபுரத்தின் வித்வான்களின் சபா மண்டபத்திற்கு வந்து பண்டிதர்களை கூட்டினார் விட்டல்பந்த். கூடவே ருக்மிணியும் குழந்தைகளும் இருந்தனர்.

பண்டிதர்கள் எதற்காக சபை கூட்டப்பட்டது என்று கேட்டபொழுது, குழந்தைகளே ஒளிவு மறைவு இன்றி தங்கள் தந்தை சன்யாசத்திற்கு பின் திருமண வாழ்க்கை கைக்கொள்ள நேரிட்டதை சொன்னார்கள். 'எங்களுக்கு உபநயனமும் யாரும் செய்விக்க வர மாட்டேன் என்கிறார்கள். அதனால் எங்களுக்கு சமூகத்தில் அங்கீகாரம் இல்லை' என்று அந்த குழந்தைகள் அழுதனர். விட்டல் பந்த்தும், இவர்களுக்கு எப்படியாவது உபநயனம் செய்விக்க வேண்டும். அப்பொழுதுதான் குழந்தைகளின் வாழ்க்கை பிரகாசம் அடைய வாய்ப்பு இருக்கிறது. இல்லாவிடில் அது இருண்டு விடும் என்று சொல்லி அழுதார்.

பண்டிதர்கள் விட்டல்பந்த்தைப் பார்த்து, எங்களுக்கு தெரிந்த பலவிதமான சாஸ்திரங்களையும் அலசி பார்த்தோம். ஒரு மனிதன் செய்யக்கூடிய பாபங்களுக்கு பலவிதமான பிராயச்சித்தங்களை பலவிதமான காண்டங்கள் பல இடங்களில் சொல்கின்றன. சிறிய தவறுக்கு கூட பிராயச்சித்தம் இருக்கிறது. ஆனால் நீ செய்ததோ சன்யாசியான பிறகு மறுபடி குழந்தைகளை பெற்றெடுத்தது எனும் பாபம். இப்படிப்பட்ட ஒரு பாபத்திற்கு எந்த ஒரு பிராயச்சித்தமும் விதிக்கப்படவில்லை. எந்த சாஸ்திரமும் இதை பற்றி சொல்ல வில்லை. விதிக்கவும் முடியாது. ஏனெனில் இந்த பாபத்திற்கு பிராயச்சித்தம் என்பதே இல்லை. அப்படிப்பட்ட பாபம் இது.

இதற்கு ஒரே ஒரு பிராயச்சித்தத்தை வேண்டுமானால் சொல்லலாம். ஒரு புண்ய நதியில் உனது உயிரை நீ தியாகம் செய்வதுதான் நலம் தரும் என்றனர்.

பண்டிதர்கள் இப்படி பேசிய உடன் விட்டல்பந்த் எந்தவிதமான எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. ருக்மிணியையும் கூட்டிக்கொண்டு அலஹாபாத்திற்கு சென்றார். திரிவேணி சங்கமத்தில் இருவரும் தங்கள் உயிரை தியாகம் செய்தனர். குழந்தைகளின் பெயரையும், மற்ற விவரங்களையும் பண்டிதர்கள் கேட்டனர். குழந்தைகளே தங்களை பற்றி மிக ஆச்சரியமாக எடுத்து சொல்லிக்கொண்டனர். (தொடரும்)

Shaking Hands Across Continents

சமீபத்தில் ஹூஸ்டன் அமெரிக்காவில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் மதுரகீத கீர்த்தனங்கள், ஆங்கிலம், சம்ஸ்கிருதம், மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னட மொழிகளில் பாடப்பட்டது. மேலும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பதினாறு சரணங்கள் கொண்ட மஹாமந்திர கீர்த்தனை பதினாறு மொழிகளில் இசையுடன் பாடப்பட்டது. அமெரிக்கா **GOD** சத்சங்க அன்பர்கள் ஒருங்கிணைந்து வழங்கிய இவ்வரிய வைபவத்தில், பிரபல மேனாட்டு இசை கலைஞர்கள் பங்கு கொண்டு இசைக்க, இதை வெகு அழகாக ஸ்ரீமதி.ராஜேஸ்வரி பட் அவர்கள் இயக்கினார்.

தரமான, சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட அப்பளம், வடாம், மணல் தக்காளி வற்றல், சுண்டைக்காய் வற்றல் போன்ற வற்றல் வகைகள், பல்வேறு ஊறுகாய் வகைகள், மாகாளி போன்றவைகள் எங்களிடம் நியாயமான விலையில் கிடைக்கும். விருப்பமுள்ளவர்கள் அணுக வேண்டிய சென்னை அலைபேசி - திருமதி.விமலா நாராயணன்

+91-95512-91270

டோர் டெலிவரி உண்டு

ஸனாதன கோஸ்வாமி

11

- ஜனனி

மதனமோஹனுடன், ஸனாதனர் யமுனா தீரத்திற்கு வந்தார். மதன்மோஹனிற்காக ஸூரியகாட் அருகில், ஒரு சிறு குடிசையை அமைத்து, அங்கே அவனை வைத்து பூஜிக்கலானார். வீடுகளிலிருந்து கோதுமை மாவை பிக்ஷையாக பெற்று அதில் உப்பு கூட சேர்க்காமல், ஒரு ரொட்டியை செய்து, மதன்மோஹனுக்கு நிவேதனம் செய்வார்.

ஒரு நாள் மதன்மோஹன் அவரிடம், "ஸாது பாபா! இந்த உப்பில்லாத ரொட்டியை என்னால் சாப்பிடவே முடியவில்லை. சற்று உப்பும் கேட்டு வாங்கி வா" என்று கூறினான். ஸனாதனர் அவனிடம், "இதெல்லாம் ஆரம்பிக்காதே! வேண்டுமானால் உப்பில்லாத ரொட்டியை சாப்பிடு, அல்லது உன் வீட்டை நோக்கி பயணம் கட்டு!" என்று கடுமையாக கூறினார்.

மதன்மோஹன் ஸர்காரோ, "பாபா! ஒரு சிட்டிகை உப்பு தர மாட்டேன் என்று எவரும் கூற மாட்டார்கள். எங்கிருந்தாவது கேட்டு வாங்கி வா!" என்றான். மறுநாளிலிருந்து ஸனாதனர், ஆடா மாவுடன் சற்று உப்பும் பிக்ஷையாக கேட்டு வாங்கி வரலானார்.

சில நாட்களுக்கு பின், மதன்மோஹனுக்கு, இனிய வெண்ணையும் கல்கண்டும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதனால், மிகவும் தீனமாக ஸனாதனரிடம், "ஸாது பாபா! இந்த வரட்டு ரொட்டி என் தொண்டைக்குக் கீழ் இறங்க மறுக்கிறது. சிறிது நெய்யும் வாங்கி வருவாயானால்..." என்று கூறி முடித்ததுதான் தாமதம்; ஸனாதனருக்கு வந்ததே கோபம். அவர் மதனமோஹனிடம் மிகவும் கோபத்துடன், "இதோ பாரப்பா! உண்மை நிலையை கூறிவிடுகிறேன். என்னிடம் இந்த வரட்டு ரொட்டிதான் கிடைக்கும். வெண்ணை - சர்க்கரை எல்லாம் வேண்டுமென்றால், யாராவது தனிகர் வீட்டிற்கு செல்ல வேண்டியதுதானே! என்னை போன்ற பிக்ஷுவிடம் இதுதான்

கிடைக்கும். உனக்கு தொண்டைக்கு கீழ் இறங்கவில்லை என்பதற்காக, நான் போய், ஏதாவது பணக்காரனிடம் நெய்யும் சர்க்கரையும் கேட்க முடியுமா என்ன? சிறிது யமுனை ஜலத்துடன் விழுங்கி விடு. வெறும் மண்ணைக் கூட உண்டவன்தானே நீ!" என்று கூறினார். மதன்மோஹனின் முகம் சிறிதாகிவிட்டது. மௌனமாகிவிட்டான். கௌபீனம் மட்டுமே அணிந்த இந்த ஸந்யாஸியிடம் அவன் வேறென்ன எதிர்பார்க்க முடியும்!

(தொடரும்)

சனாதனப்புதிர் பகுதி 82 -- விடைகள் -ஆத்ரேயன்

1. சஞ்சனா, ப்ரபா, ரஞ்சனி, சாயா-4மனைவிகள். த்வஸ்தா, மனு, யமன், யமுனை, ரேவந்தா, ப்ரபாதா, சாவர்ணி, சனி, தபதி - 9 குழந்தைகள்.
2. காயத்ரி, ப்ரஹதி, உஷ்ணிக், ஜகதி, த்ருஷ்டுப், அனுஷ்டுப், பங்க்தி
3. அத்ரி ரிஷியின் குழந்தை
4. தக்ஷனின் பெண்களான 27பேரை சந்திரன் மணந்தார். ரோஹிணியிடம் பிரியமாக இருந்ததால் க்ஷயரோகத்தால் பீடிக்கும்படி தக்ஷன் சபித்தார்.
5. 28 - 27நக்ஷத்திரங்களை தவிர அபிஜித் என்றொரு நக்ஷத்திரம்.

love is eternal.....we build homes with love

radha krishna real estates

rajmani group of companies

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com

Dr. Shriraam Mahadevan

MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes
Regn. No 62256

ENDOCRINE & SPECIALITY CLINIC

New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,
R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090Mob: 94458 80090
E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com
www.chennaiendocrine.com

பாலகர்களுக்கு ஒரு கதை

நன்றி மறவாமை!

மூங்கில் ஒன்றும், காட்டு செடி ஒன்றும் அருகருகே நடப்பட்டு இருந்தது. இரண்டையும் தோட்டக்காரர் வெகு கவனமுடன் நீர் விட்டு பார்த்து பார்த்து வளர்த்து வந்தார். இரண்டின் மேலும் சூரிய ஒளி பட்டு வந்தது.

முதலில் சில நாட்களுக்கு இரண்டும் முளைக்கவில்லை. அப்புறம் மேலும் சில காலம் கழித்து முதலில் மூங்கில் முளைக்கவில்லை. ஆனால் முதலில் அந்த காட்டு செடி பூமியிலிருந்து தோன்றியது. முதல் வருடம் அது சின்னதாக இருந்தது. ஆனால் கொஞ்சம் வளர்ந்தது. இரண்டாவது வருடம் நன்கு வளர்ந்தது. அதன் பச்சை நிறம் பார்க்க அழகாக இருந்தது. அது வரையிலும், மூங்கில் நடப்பட்ட இடத்தில் ஒன்றும் வரவில்லை. இருந்தாலும், அந்த தோட்டக்காரர் இரண்டிற்கும் நீர் வார்த்து வந்தார். எப்படியும் மூங்கில் ஒருநாள் முளைக்கும் என அவருக்கு பொறுமையும் நம்பிக்கையும் இருந்தது.

ஆனால், அந்த காட்டு செடி வளர்ந்து கொண்டே இருந்தது. மூன்று, நான்கு என ஒவ்வொரு வருடமும் அந்த காட்டு செடி பார்க்க பார்க்க உயரமாகி கொண்டே இருந்தது. ஆனால் மூங்கில் மட்டும் பூமியில் இருந்து எட்டி கூட பார்க்கவில்லை. அதற்காக அந்த தோட்டக்காரர் மனம் தளரவில்லை. அவர் நம்பிக்கை குறையவும் இல்லை. முன்பு போலவே நம்பிக்கையுடன் அவ்விடத்தை பாதுகாத்து வளர்த்து வந்தார்.

ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. நான்கு வருடம் முளைக்கவே முளைக்காத மூங்கில், ஐந்தாம் வருடம் சட்டென சின்னதாக துளிர்விட்டது. ஆனால் முளைத்த பின்னரோ, கொஞ்சம் கொஞ்சமாக வளரவில்லை அது. ஒரு வருடம் கூட காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாமல், அது ஆறு மாதத்திற்குள் கிடுகிடுவென வளர்ந்து விண்ணை நோக்கி உயர்ந்து நின்றது!

என்ன காரணம்? அதன் வேர்கள் மிகவும் பலம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும். அது, முதலில் நான்கு வருடங்கள் தன் வேர்களை பலப்படுத்தி கொண்டு இருக்கிறது. அதுதானே முக்கியம். வேர் பலமாக இருந்தால் எல்லாம் பலமாக இருக்கும். வேரில் நீர் ஊற்றினால், மரம் முழுமைக்கும் ஊற்றியதாக ஆகும். அதனால்தானே குருநாதர் வேருக்கு நீர் வார்த்தால் மரத்துக்கு நீர் வார்த்ததாகும்; மஹாமந்திரம் வேருக்கு நீர் வார்த்தல் போன்றது என்கிறார்.

வேர்களை பலப்படுத்தி கொண்ட பின், மூங்கில் குறுகிய காலத்தில் பலமாக வளர ஆரம்பிக்கிறது. ஆனால், வேர்களை நன்கு பலப்படுத்தாத காட்டு செடியோ முதலில் வேகமாக வளர்ந்தாலும், நான்கு ஐந்து அடிக்கும் மேலே செல்லவும் முடியாமல், மூங்கில் போல அதிக பலம் வாய்ந்ததாகவும் இல்லாமல் நின்று விடுகிறது.

இதை கொண்டு ஒரு விஷயத்தை எளிதில் சொல்ல முடியும். எதன் மூலம் தான் மனிதனாக வளர்ந்து, படித்து, அறிவு முதிர்ச்சி பெற்று, புகழ் பெற்று நல்வாழ்க்கை வாழ்கிறானோ, அப்படி தான் வந்த வழியையும், அதற்கு காரணமான தாய், தந்தையர், நல் நண்பர், ஆசான், குரு ஆகியோரிடம் நன்றி மறவாமல் இருக்க வேண்டும். வேர்களுடன் கூடிய தொடர்பாலும், வேர்களின் வளர்ச்சியாலும் எப்படி மூங்கில் பலமுடன் விளங்குகிறதோ, அப்படியே, தான், பெரியவனாக வளர்ந்த வழியை ஒவ்வொருவரும் மறக்க கூடாது. தான் வளர காரணமானவர்களை மறந்து, நன்றி மறந்து வாழ்பவனோ காட்டு செடி போல ஒருக்கால் சீக்கிரம் வளர கூடும். ஆனால் வேரில் பலமில்லாததால், பலம் குன்றி சிறியதாக காட்டு செடி நிற்பது போல், உயர முடியாமல் கஷ்டப்படுவான்.

நன்றி மறவாதவனோ மிக்க பலம் வாய்ந்தவனாக குணவானாக இருப்பான். அப்படி மறக்காமல் நன்றி உணர்வுடன், பொறுமையாக நல்வழி நிற்பவன், மூங்கில் போல, மேலும் மேலும் செழிப்பாக வளர்ந்து முன்னிலும் அதிக பலத்தை பெற்று திகழ்வான் என்பது தெரிகிறது அல்லவா!

ஜனவரி 1 அன்று மதுரை SDH ஜெயின் வித்யாலயாவில், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மஹாமந்திர கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்றது. பள்ளி மைதானம் மதியத்திலிருந்தே நிரம்ப ஆரம்பித்திருந்தது. எளிய பாமரர் முதல் மிகவும் படித்தோர் வரை பலரும் இதில் கலந்துகொண்டிருந்தது பார்த்தவுடனேயே புரிந்தது.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் தம் அருளுரையில், மதுரையின் பழம்பெருமை, இம்மண்ணில் தோன்றிய சான்றோர் பெருமை, பிரார்த்தனையின் மகத்துவம் எல்லாம் எல்லோர் மனதில் பசு மரத்தாணி போல் பதியும்படி எடுத்துரைத்தார்கள். அது கேட்ட அனைவரும், ஒரு புதிய மனோபலம் பெற்று சென்றிருப்பர் என்பதில் ஐயமில்லை. பிரார்த்தனை கூட்டத்தில் நேரடியாக கலந்துகொண்டோரை தவிர, இணையத்திலும் நேரடி ஒளிபரப்பை சுமார் ஒரு லக்ஷத்திற்கும் மேற்பட்டோர் பார்த்தனர். அவர்கள் தாங்கள் நேரில் கலந்து கொள்ள முடியவில்லையே என்ற தாபத்தையும் தீர்த்துக்கொண்டனர்.

கலந்துகொண்ட அன்பர்கள், பலவாறெல்லாம் தங்கள் அனுபவத்தை தெரிவித்திருந்தனர். அதை வரி வரியாகவும் அதில் அவர்கள் தெரிவித்திருக்கும் ஆழத்தையும் கவனமாக ஊன்றி படித்தாலே, பிரார்த்தனை கூட்டத்தில் அவர்களெல்லாம் எவ்வளவு உன்னிப்புடன் கவனமாக கலந்துகொண்டிருந்தார்கள்; உணர்வு பூர்வமாய் ஒவ்வொருவரும் ஸ்ரீஸ்வாமிஜியின் அருளுரையை கேட்டிருக்கிறார்கள் என்பது தெள்ளத்தெளிவு. அவை பின்வருமாறு இருந்தன:

'மனதில் மிகுந்த பாரத்துடன் வந்தேன். ஆனால் பிரார்த்தனை கூட்டம் முடிந்து திரும்புகையில் மனது இலேசாகி இருந்தது. பிரார்த்தனையின் வலிமை குறித்து ஸ்ரீஸ்வாமிஜி பேசிய விஷயங்கள் மிகவும் நன்றாக இருந்தது. அவர் இன்னும் பேச வேண்டுமே என்று நினைத்து கொண்டிருக்கையிலேயே அவர் முடித்துவிட்டார். எனது வீட்டில் அவரது சத்சங்கம் வைத்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கூட்டம் மிகுதியாக இருந்ததால் அருகில் செல்ல முடியவில்லை. இருப்பினும் பிரார்த்தனை கூட்டம் முடிந்தவுடன் மனது சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது. அன்பர்கள் சொன்ன நாம அனுபவங்களை கேட்பதற்கு ஆச்சரியமாகவும்

இனிமையாகவும் இருந்தது. கூட்டுபிரார்த்தனைக்கு பின் மனதில் நம்பிக்கை பிறந்துள்ளது. எல்லோருக்காகவும் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பிரார்த்தனை செய்தது மிகவும் மனதிற்கு இதமாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. நமது பாரதீய கலாசாரத்தை ஒட்டி, இப்படி பெருந்திரளாய் சேர்ந்து கூட்டங்கள் அமைவதில்லையே என வருத்தம் எனக்கு உண்டு; இப்பிரார்த்தனை கூட்டத்தை பார்த்தவுடன் அந்த வருத்தம் கலைந்து மனம் திருப்தி அடைகிறது. ஆன்மீகத்தில் புரியாத பல விஷயங்களை ஒரு இரண்டு மணி நேரத்தில் மிக சுலபமாக தெளிவாக தெரிந்து கொண்டேன். மதுரையின் சிறப்பு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறதே! என் நாட்டின் பெருமை எனக்கு தெரியாமல் இருக்கிறதே!' என்றெல்லாம் சொல்லி இருந்தார்கள்.

மேலும், பிரார்த்தனை கூட்டத்தில் மௌனமாக அனைவரையும் ஒருசேர பிரார்த்திக்க சொல்லும் முன் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் 'உளமார ஒன்றி பிரார்த்திப்பவர்கள் நிச்சயம் ஏதோ ஒருவிதத்தில் பகவான் இங்கு உலாவுவதை உணருவீர்கள்' என்று ஆழமாய் சொன்னார்கள். பலர் *'பயணத்தினால் மிகுந்த களைப்புடன் வந்தேன். பிரார்த்தனைக்கு பின் களைப்பு நீங்கி புத்துணர்வு பெற்றாற் போலாகி விட்டேன். இதில் கலந்து கொண்டது எனது பெரும் பாக்கியம் என்று எண்ணுகிறேன்'* என்று சொன்னார்கள்.

'மகிழ்ச்சியில் மனம் சிறகடித்து பறப்பது போல் இருந்தது' 'மிகுந்த அமைதியாக எதை பற்றியும் கவலை இல்லாமல் சிந்தனையே அற்று போனதாக சந்தோஷமாக உணர்ந்தேன்' 'என் கவலைகளுக்கு முற்றுப்புள்ளி வந்ததாலும் மனம் நெகிழ்ந்ததாலும், நான் விரும்பாமலேயே என் கண்களில் நீர் வழிந்தது. சந்தோஷமாக இருந்தேன். கூட்டத்தின் மத்தியிலும் நான் தனிமையாக ஆனந்தமாக இருப்பதாக உணர்ந்தேன்' என்றெல்லாம் சொன்னார்கள்.

இன்னும் சிலருக்கு, அவரவர்களின் தெய்வம் எதுவோ அதனதன் வெளிப்பாடு, சகுனங்கள் வாயிலாக இருந்தது என்று சொல்லி இருந்தார்கள். அது அவரவர்களின் நம்பிக்கையை கூட்டும் விதமாக அமைந்திருந்தது. சிலருக்கு அவரவர்களின் குருவும் தெய்வமும் அருகிலிருந்து ஆசிர்வதிப்பது போல், அனுபவம் ஏற்பட்டது. இதை எல்லாம்

அவர்கள் தெரிவித்த விதத்திலேயே, அவர்களால் விவரிக்க முடியாததாய், சில மணி துளிகளில் அவை நிகழ்ந்திருக்கிறது என்று தெரிந்தது. பிராணிகளிடமும் ஜீவராசிகளிடமும் மனதில் சுபாவமாய் தோன்றும் உணர்வு மாறி, அவற்றையும் உயர்த்தி பார்க்கும் தன்மை அதில் தெரிந்தது. மிகவும் ஈடுபாடு இல்லாமல் வந்தோர் கூட, முடிவில் தாங்கள் மிகவும் பயன் பெற்றதாக கருதினார்கள். சாதாரணமாக தங்கள் அனுபவத்தை சொல்ல விரும்பாதவர் கூட, மனத்தில் ஏற்பட்ட இளக்கம் காரணமாக தங்கள் அனுபவத்தை ஒருவரோடொருவர் பகிர்ந்து கொள்ள விழைந்திருக்கின்றனர் என்பது அவர்கள் சொல்வதில் இருந்து தெரிந்தது.

இதில் ஆச்சரியம் என்னவென்றால், கூட்டுப்பிரார்த்தனை விவரம் தெரிவிக்கப்பட்ட 15நாட்களில் அனைத்து அன்பர்களும் மதுரைக்கு வந்திருந்தனர்! அனைவரும் ஒன்று கூடி அமைதியாக பெரிய ஏற்பாடின்றி, ஒழுங்காக ஒருமுகப்பட்ட மனத்துடன், கேட்டு அனுபவித்து அதை உள்வாங்கி சென்றது, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அசாதாரணமான அருட்செயலே என்பதையும், சிலர் குறிப்பிட்டிருந்தனர்.

கிராமங்களில் இருந்து புதிதாய் வந்தவர்களோ, *எளிமையும் கருணையும் மிகுந்து ஒரு அற்புத வலிமையான குருநாதர் கிடைப்பார் என்று எதிர்பார்க்கவில்லை. ஆன்மீகம் என்றால் கடினம் என நினைத்தோம். கற்கண்டாய் அல்லவா அவர் பேச்சிருக்கிறது; இது பிரசாதம்* என்று சொல்லி சென்றனர்.

தங்கள் முழு நேரத்தையும் செலவழித்து பல அன்பர்கள் இதற்கு உழைத்திருந்தனர். அவர்களின் பாக்யத்தை என்னவென்று சொல்வது!! பிரார்த்தனை கூட்டத்தின் ஆரம்பத்தில் டாக்டர்.பாக்யநாதன்ஜி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி நடந்து வரும் அறக்கட்டளைகளின் செயல்பாடுகளை தெளிவாக எடுத்து சொன்னார். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், அருளுரையை ஆரம்பிக்கும் முன், வெவ்வேறு நாட்டிலிருந்து வந்திருந்த ஏழெட்டு அன்பர்கள், தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொன்றும் வித்யாசமாய் இருந்தது.

ஆச்சரியமாக எப்படி திருவருள் அவர்களுக்கு வாழ்வில் துணையாக இருந்திருக்கிறது என்பதும் புரிந்தது. இந்நிகழ்ச்சியின் விவரங்கள், பரவலாக தமிழக நாளிதழ்களில் வெளிவந்திருந்தன.

நாமதொடர் கீர்த்தனம் – புத்தாண்டை வரவேற்கும் விதமாகவும், உலக மக்கள் அனைவரும் எல்லா வளங்களைப் பெற வேண்டி, உலகில் உள்ள நாடுகளை இணைத்து ஒரு நாமதொடர் கீர்த்தனத்தை குருநாதரின் பரிபூரண அருளுடன் **GOD** சத்சங்க அன்பர்கள் கடந்த சில வருடங்களாக ஏற்பாடு செய்து வருகின்றனர். இது பிரதி வருடம் ஜனவரி மாத முதல் சனிக்கிழமையில், மஹாமந்திர கீர்த்தனமானது **24** மணி நேரத்திற்குள், உலகை ஒரு வலம் வரும் வகையில், நியூசிலாந்து தொடங்கி வட அமெரிக்காவில் முடிவடையும் படி நடைபெறுகிறது. இவ்வருடமும், நியுசிலாந்தில் தொடங்கிய மஹாமந்திர கீர்த்தனமானது பிஜி தீவு, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேஷியா, இந்தியா, மத்திய வளைகுடா நாடுகள், பின்லாந்து, காங்கோ, ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய சுமார் இருபது நாடுகளில் பல மாகாணங்களில் நடைபெற்றது.

ஜனவரி 3 யோகிராம்சுரத்குமார் சத்சங் சமிதி டிரஸ்ட் சார்பில் திருவல்லிக்கேணியில் நடைபெற்ற பகவான் யோகிராம்சுரத்குமார் ஜெயந்தி விழாவில் கலந்துகொண்டு, ஸ்ரீஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள். கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்ற குழந்தைகளுக்கு பரிசுகளும் வழங்கினார்கள்.

ஜனவரி 9முதல் 17 வரை ***சென்னை நாரத கானசபா***வில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தொண்டரடி பொடியாழ்வார் அருளிய ***திருமாலை*** குறித்து உபன்யாசம் செய்தருளினார்கள். அரங்கம் அன்பர்களால் தினமும் நிரம்பி வழிந்தது. பூர்த்தி அன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில், பாகவத சம்பிரதாயப்படி ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது. **10**ஆம் தேதியன்று, மதுரகீதம் பஜனை போட்டியின் இறுதி சுற்று நடைபெற்றது. வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியருக்கு பரிசுகளை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தம் திருக்கரங்களால் வழங்கினார்கள். இந்த மதுரகீதம் பஜனைபோட்டியின் இறுதி சுற்று ஸ்டார் விஜய் தொலைக்காட்சியில் பின்னர் ஒளிபரப்பாகியது.

அனுமத் ஜெயந்தி - மதுரபுரி ஆஸ்ரமத்தில் ஜனவரி 9ஆம் தேதி கன்யாகுமரி ஜய ஹனுமான் சன்னதியில் ஹனுமத் ஜெயந்தி, ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் திருமஞ்சனம், சிறப்பு பூஜை, வடைமாலையுடன் மிகவும் விசேஷமாக கொண்டாட பெற்றது.

வெள்ளக்கோவில் சத்சங்கம் - டிசம்பர் 24ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை வெள்ளக்கோவில் **G.O.D.**சத்சங்கம் சார்பில், திருப்பாவை விழா கார்மேகம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. தினமும் வெவ்வெறு பகுதிகளில் காலையில் நகரசங்கீர்த்தனமும், 27ஆம் தேதி அன்று ஆண்டாள் கல்யாணமும் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான அன்பர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில், ஸ்ரீபம்மல் பாலாஜி 'குறையொன்றுமில்லை கோவிந்தா' என்ற தலைப்பில் தினமும் உபன்யாசம் செய்தார்.

லட்சுமிபுரம் ரேணுகா வித்யாலயாவில் சத்சங்கம் - 2014 ஜனவரி 1ஆம் தேதியன்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்ற (தேனி-பெரியகுளம் சாலை) ரேணுகா வித்யாலயாவில் டிசம்பர் 23 அன்று அகண்டமாக நாமகீர்த்தனம், சத்சங்கம், கீதம் இசைத்தல் நடைபெற்றது. மஹாமந்திர கூட்டுப்ரார்த்தனையை கிருஷ்ணசைதன்யதாஸ் நிகழ்த்தினார். ஆசிரியர்கள் மதுரமுரளியில் இருந்து நற்கருத்துக்களை மாணவர்களுக்கு இடை இடையே எடுத்து சொன்னார்கள்.

மஹாமக மஹோத்ஸவ வேதபாராயணம்

லோக க்ஷேமார்த்தமாக கும்பகோணம் சாஸ்திரா பல்கலைக்கழக வளாகத்தில் மஹாமக வைபவத்தை ஒட்டி

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கர்ய சபா

சார்பாக பிப்ரவரி 12 முதல் 22வரை ஸ்ரீசாந்தீபனி குருகுலம் மற்றும் ஸ்ரீஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலை வித்யார்த்திகள், அத்யாபகர்களால் ரிக், யஜுர், சாம வேத, திவ்ய ப்ரபந்த பாராயணம் நடைபெறும். இந்த மஹோத்ஸவத்தில் வேத வித்வான்கள் தங்குவதற்கும், போஜன கைங்கர்யத்திற்கும் **சாஸ்திரா பல்கலைக்கழகம்** தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கொண்டுள்ளது.

ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்

- ஜனனி

ஸ்ரீ ஹரி பாபாஜி

ஒரு பெரிய புயலினால் கடல் கொந்தளித்து, அதன் பேரலைகளால் கரையோரமிருந்த எத்தனை உயிர்களை தன்னுள் இழுத்து சென்றது என்றோ, அது விளைவித்த சேதத்தின் அளவு என்ன என்பதையோ கணக்கிலிட முடியாது. எஞ்சியிருந்த உற்றார் உறவினர்கள் தலைமேல் கை வைத்து கொண்டு தங்கள் துர்பாக்யத்தை நொந்து கொண்டிருக்க, அங்கே ஒரு சிட்டு குருவி! அதன் முட்டைகளையும் கடல் அடித்துச் சென்றுவிட்டதாம்! மீண்டும் இவ்வாறு ஆகாமல் தடுக்க, அது தன் சிறு அலகினால் மண் எடுத்து எடுத்து கடலை அடைக்க முயன்று கொண்டிருக்கிறது!

இது போன்ற ஒரு முயற்சியில் தான் ஹரிபாபா இறங்கினார். புலந்த் நகர் ஜில்லாவில், 45 மைல்கள் நீளத்திற்குள் அடங்கிய 700 கிராமங்களும், ஒவ்வொரு வருடமும் கங்கையில் ஏற்படும் வெள்ளத்தினால் எத்தனை அல்லல்படுகிறது என்றும், எத்தனை சேதம் ஏற்படுகிறது என்றும் சொல்லி முடியாது. அதனால் ஹரிபாபா ஜீவ்புர் எனும் க்ராமத்திலிருந்து ராஜ்காட் வரையிலும், 20 மைல் நீளமும், 75 அடி அகலமும், சில இடங்களில் 12 அடி உயரமும் கொண்ட ஒரு அணை அமைக்க வேண்டும் என்று தீர்மானித்துவிட்டார். தீர்மானம் கொண்ட மறுகணம் செயலில் இறங்கினார்.

அணையின் அளவுகளை குறித்துக் கொண்டு, ஒரு பாண்டில் மணலை நிரப்பி தன் கையாலேயே மண் அடிக்க துவங்கினார்.

கடலை அடைக்க எண்ணிய அந்த குருவி ஒரு சிறிய, அறிவில்லா ஜீவன். ஆனால் இந்த பெரிய அணையை அமைக்க விதை விதைத்த ஹரிபாபாவோ ஒரு மேதாவியான மஹாபுருஷராவார். லோக வ்யவஹாரம் செய்வதிலும் அவர் சமர்த்தராக இருந்தார். கனவிலும் முடியாத இது போன்ற ஒரு காரியத்தில் பாபா ஈடுபடுவதைக் கண்ட மக்களின் வியப்பிற்கு எல்லையேயில்லை.

அவர்கள் பாபாவிற்கு ஆலோசனை கூற ஆரம்பித்துவிட்டார்கள். "பாபா! உங்களுக்கு என்ன ஆகிவிட்டது? உங்கள் தோளில் இவ்வளவு பெரிய காரியத்தை ஏன் ஏற்றுக் கொள்கிறீர்கள்?"

ஆனால் பாபாவோ சற்றும் அசைந்து கொடுக்கவில்லை. ஏனென்றால் அவர் தன் பலத்தை நம்பவில்லை, ஹரி நாமத்தின் நினைக்க முடியாத மற்றும் எல்லையில்லாத ப்ரபாவத்தின் மீது நம்பிக்கை கொண்டே அவர் இந்த காரியத்தில் இறங்கினார்.

இந்த அணையை கட்ட துவங்கிய விதமே, பாபாவின் ஹரிநாம நிஷ்டை மற்றும் நம்பிக்கையை வெளிப்படுத்தும். 1922 ஆண்டின் தை மாதம் ஸிலாரா எனும் இடத்தில் சில அன்பர்களுடன் சேர்ந்து நாம கீர்த்தனம் செய்தார். பின் கங்கா மாதாவிற்கு நமஸ்காரம் செய்து, விக்னேஸ்வரருக்கு பூஜை செய்து, ஸ்வஸ்தி வாசகங்களும், மங்கள பாடத்திற்கு பின்னர், மண் அடிக்கும் வேலை துவங்கியது.

அன்பர்களான தனது பக்தர்களிடம் பாபா, "நான் சபதம் செய்திருக்கிறேன். சித்திரை மாதம் சுக்ல அஷ்டமிக்குள் மண் அடிக்கும் வேலை பூர்த்தியாக வேண்டும். அப்படி முடியாவிட்டால், நான் ப்ராண த்யாகம் செய்து விடுவேன். உங்களில் யார் எனக்கு உதவ நினைத்தாலும், அணை கட்டும் வேலையில் எந்த வேலை செய்தாலும், உங்கள் வாயில் மட்டும் ஸதா ஹரிநாமம் வந்து கொண்டே இருக்கட்டும். நாம பகவான் நிச்சயமாக நமது ஸங்கல்பத்தை பூர்த்தி செய்வார். இதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை" என்று பாபா கூறினார்.

இப்படி பாபா கூறியதும், மக்களுக்கு தர்க்க-விதர்க்கங்கள் செய்ய நேரமில்லை. பாபா தன் உயிரையல்லவா பணயம் வைத்திருக்கிறார்! எண்ணிலடங்காத அவர் பக்தர்களுக்கு அணை கட்டுவதில் ஈடுபடுவதை தவிர வேறு எந்த ஒரு வழியும் இல்லாமல் போனது.

அதனால் அனைவரும் பாபாவுடன் சேர்ந்து மண் அடிக்க துவங்கினார்கள். (தொடரும்)

“மதுரமுரளி” ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission ஏற்றுக்கொள்ளப்படும்.**
- **சந்தா அனுப்ப முகவரி: Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- **மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.**
- **கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.**
- **ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.**
- **மதுரமுரளி விவரங்களுக்கு** helpdesk@madhuramurali.org **என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.**

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission

* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்

ஏகாதசி	பிப்ரவரி 4, 18 மார்ச் 5, 19 February 4, 18 March 5, 19
பிப் 12	வசந்த பஞ்சமி - ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் பிரதிஷ்டா தினம்
பிப் 13	திருவண்ணாமலை

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org
என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833